குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**STC.No.464/2024**

**வழக்கு சாட்சி ம.சா.1**

2026ம் மார்ச் மாதம் 09-ம் நாள் மனுதாரர்தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சிவக்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Gunasekaran | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

நாள்: 09.03.2026

**குறுக்கு விசாரணை**

நான் விவசாயம், துணி வியாபாரம், LIC, மாதச்சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் மாதச்சீட்டு மட்டும் நடத்தவில்லை. இதர விவரங்கள் சரிதான். எனக்கு தமிழ் ஆங்கிலம் எழுத படிக்கத் தெரியுமா என்றால் தமிழ் நன்றாக தெரியும். ஆங்கிலம் ஓரளவுக்கு தெரியும். எதிரி என்னிடம் ரூ.5,00,000/- மட்டும் சீட்டு நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த வங்கி காசோலையை கொடுத்தார் என்றால் Karur Vysya Bank. எதிரி என்னிடம் பூர்த்தி செய்யாமல் காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. அவர் பூர்த்தி செய்து தான் கொடுத்தார். நான் கையொப்பம் செய்தேன். எதிரி தேதியில் காசோலையை கொடுத்தார் என்றால் 06.11.2023 எதிரி என்னிடம் வழக்கு காசோலையை கொடுத்தார். நான் காசோலையை எந்த வங்கியில் பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் IDBI வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன். 05.10.2022 ம் தேதி அன்று எதிரி என்னிடம் சீட்டை எடுத்ததற்கு ஆதரவாக இந்த காசோலையை கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய புகாரின் சாட்சி பட்டியலில் நான் வசூலுக்கு தாக்கல் செய்துள்ள வங்கி கிளையையும் எதிரியின் வங்கி காசோலை கிளையையும் சேர்த்தாதிலேயே இது பொய் வழக்கு என்று நிரூபணம் ஆகிறது

என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனக்கு வங்கி மூலமாக ரூ.2,65,400/- அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே எங்களுக்குள் தொழில் ரீதியான வரவு செலவு இருந்து வந்தது அதன் அடிப்படையில் அனுப்பியுள்ளார். எதிரியை எனக்கு எந்த வருடமாக தெரியும் என்றால் சுமார் 5 -6 வருடங்களாக பழக்கம்.